இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 57 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 20 – புதன்கிழமை 07 அக்டோபர் 2026 – சென்னை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 57 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 20 - Wednesday 07 October 2026 - Chennai 10 Pages ₹ 5.00

SIR மூலம் அதிக அளவில் வாக்காளர்களை நீக்கி

த.வெ.க. வெற்றி பெற தேர்தல் ஆணையம் சதி!

புள்ளிவிவர ஆதாரங்களுடன் ‘தி இந்து பிஸினஸ்லைன்’ பரபரப்புத் தகவல்!


சென்னை, அக். 7-

தேர்தல் ஆணையத்தின் SIR மூலம் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் மாறியுள்ளதாக, the hindu businessline ஆங்கிலப் பத்திரிகை பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான வாக்காளர் நீக்கங்கள் நடந்த தொகுதிகளில், த.வெ.க. அதிக தொகுதிகளிலும், குறைவாக வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் த.வெ.க. வெற்றி வாய்ப்பை இழந்துள்ளதும் அம்பலமாகியுள்ளதாக அந்த சிறப்பு கட்டுரையில் புள்ளி விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேர்தல் முடிவுகள் குறித்து the hindu businessline ஆங்கில பத்திரிகை அண்மையில் மேற்கொண்ட பகுப்பாய்வில் பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் நீக்கங்கள், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை மாற்றியமைத்திருப்பது புள்ளிவிபர ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான வாக்காளர் நீக்கங்கள் நடந்த தொகுதிகளில் த.வெ.க. அதிகப்படியான இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SIR பணியில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதால்தான், சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தோல்வியடைந்ததாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியதையும் the hindu businessline சிறப்பு கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது.



புள்ளிவிவரங்கள்!

வாக்காளர்கள் குறைவாக நீக்கப்பட்ட தொகுதிகளில், த.வெ.க.வின் வெற்றி விகிதம் குறைவாகவும், வாக்காளர்கள் அதிகமாக நீக்கப்பட்ட தொகுதிகளில் த.வெ.க. அதிக வெற்றியை பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில், 19 தொகுதிகளில் வாக்காளர் நீக்கம் 10 ஆயிரத்துக்கும் குறைவாக இருந்தது. இவற்றில், த.வெ.க. வெறும் 2 இடங்களிலும், தி.மு.க. 7 இடங்களிலும், அ.தி.மு.க. 6 இடங்களிலும், மற்ற கட்சிகள் 4 இடங்களிலும் வெற்றி பெற்றதாக கூறப்பட்டுள்ளது. அதேநேரம், 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வாக்காளர்கள் வரை நீக்கப்பட்ட 80 சட்டப்பேரவை தொகுதிகளில் த.வெ.க. 22 இடங்களிலும், தி.மு.க. 20 இடங்களிலும், அ.தி.மு.க. 24 இடங்களிலும், மற்ற கட்சிகள் 14 இடங்களிலும் வெற்றி பெற்றதாக புள்ளி விவரங்களுடன் the hindu businessline குறிப்பிட்டுள்ளது.

இதேபோன்று, 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான வாக்காளர்கள் நீக்கப்பட்ட 66 தொகுதிகளில் த.வெ.க. 32 இடங்களிலும், தி.மு.க. 21 இடங்களிலும், அ.தி.மு.க. 11 இடங்களிலும், மற்ற கட்சிகள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றதாகவும் சிறப்பு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் த.வெ.க.வுக்குச் சாதகமானது எப்படி?

இந்த பகுப்பாய்வுகளின்படி, வாக்காளர் நீக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, தேர்தல் முடிவுகள் த.வெ.க.வுக்கு சாதகமாக அமைந்திருப்பது தெளிவாக தெரிவதாகவும் கூறப்பட்டுள்ளது.

30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலான வாக்காளர்கள் நீக்கப்பட்ட 37 தொகுதிகளில், த.வெ.க. 24 தொகுதிகளிலும், தி.மு.க. 8 தொகுதிகளிலும், அ.தி.மு.க. 5 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

50 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலான வாக்காளர்கள் நீக்கப்பட்ட 22 தொகுதிகளில் த.வெ.க. 18 இடங்களிலும், தி.மு.க. 3 இடங்களிலும், அ.தி.மு.க. ஒரு இடத்திலும் வெற்றி பெற்றன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்ட 10 தொகுதிகளில் அனைத்திலும் த.வெ.க.வே வெற்றி பெற்றதாக புள்ளி விவரங்களுடன் the hindu businessline குறிப்பிட்டுள்ளது. 2021 சட்டமன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க.வெற்றி பெற்ற தொகுதிகளில் 27 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், தி.மு.க. வெற்றி பெற்ற தொகுதிகளில் 31 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் கருத்து!

தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், இந்தியர்களை வாக்குரிமை உள்ளவர்கள் மற்றும் இல்லாதவர்கள் என இரு பிரிவுகளாக பிரித்திருப்பதாக பிரபல பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் கூறியதும் இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

உரிமைகளுக்காக அறவழியில் போராடிய

செவிலியர்கள் கைது! த.வெ.க. அரசின் அராஜக நடவடிக்கை!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக்.7 -

உரிமைகளுக்காக அறவழியில் போராடிய செவிலியர்கள் கைது செய்திருப்பது த.வெ.க. அரசின் அராஜக நடவடிக்கை என்று குறிப்பிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பக்கத்தில் தனது கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவு வருமாறு :-

கண்துடைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, முதுகில் குத்தும் த.வெ.க. அரசின் துரோகத்திற்குச் செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?

பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்ட தங்களது வாழ்வாதார உரிமைகளுக்காக அறவழியில் போராடிய செவிலியர்களைக் காவல்துறையைக் கொண்டு கைது செய்த த.வெ.க. அரசின் அராஜக நடவடிக்கைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராடும் செவிலியர்களுடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்திட மனம் வராத துரோக



த.வெ.க. அரசுக்கு, ஈவு இரக்க மின்றி அவர்களைக் கைது செய்ய மட்டும் எப்படி மனம் வந்ததோ?

போராடிய செவிலியர்களின் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கைது செய்ததாக அவர்களது சட்ட ஆலோசகரே குற்றம் சாட்டியிருக்கிறார். தொடர்ந்து, போராட்டக் களத்திலிருந்த செவிலியர்களும் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியாக இருக்கும் போது போராட்டக் களத்திற்குச் சென்று ஆதரவு;

தேர்தல் வந்தபோது பணி நிரந்தரம் செய்வோம் என்று வாக்குறுதி;

ஆட்சிக்கு வந்ததும் அதே கோரிக்கையை முன்வைத்தால் காவல்துறை நடவடிக்கை!

முரண்பாட்டு மூட்டையாக விளங்கும் முதலமைச்சர் விஜயும், அவரது நிர்வாகத் திறனற்ற துக்ளக் நடவடிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கும் அதிமேதாவி அமைச்சர்களும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

போராட்டக் களத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையிலும், செல்போன் டார்ச் வெளிச்சத்தில் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்த செவிலியர்களை இரவோடு இரவாக வலுக்கட்டாயமாகக் கைது செய்ததுதான் த.வெ.க. கூறும் ‘மாற்றமா’? இதுதான் அவர்கள் போற்றும் ஜனநாயகமா?

போராடிய செவிலியர்களை நோக்கி பெண் காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி “வேண்டாம் உங்க உயிர் முக்கியம்” என மிரட்டியதுதான் ஜனநாயக வில்லனின் குரலா என்பதைக் காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் விளக்குவாரா? அல்லது, செவிலியர்களை மிரட்டி குண்டுகட்டாகக் கைது செய்த பெண் காவலர்களின் செயலை “சிங்கப்பெண் in action” என Reels செய்து தனது virtual abuser கள் மூலம் trend செய்து விளம்பரம் தேடுவாரா?

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் கூறியுள்ளார்.

காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி மிரட்டுவதா?

போராடிய செவிலியர்களை நோக்கி பெண் காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி “வேண்டாம் உங்க உயிர் முக்கியம்” என மிரட்டியதுதான் ஜனநாயக வில்லனின் குரலா என்பதைக் காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் விளக்குவாரா? அல்லது, செவிலியர்களை மிரட்டி குண்டுகட்டாகக் கைது செய்த பெண் காவலர்களின் செயலை “சிங்கப்பெண் in action” என Reels செய்து தனது virtual abuserகள் மூலம் trend செய்து விளம்பரம் தேடுவாரா?

மதுராந்தகம் - தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு!

மக்கள் வரிசையில் காத்திருந்து ஆர்வமுடன் வாக்களித்தனர்!

சென்னை, அக். 7 - மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் த.வெ.க.வின் குதிரை பேரத்தால் அத்தொகுதி மக்கள் மீது இடைத்தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தொகுதிகளிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன. தி.மு.க. சார்பில் மதுராந்தகத்தில் இ.பரந்தாமனும், தாராபுரத்தில் எஸ். சுகன்யாவும் போட்டியிட்டனர். இரண்டு தொகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்நிலையில், இந்த இரண்டு தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.

வேட்பாளர் சுகன்யா வாக்குப்பதிவு!

காலை முதலே மக்கள் வரிசையில் காத்திருந்து ஆர்வமுடன் வாக்களித்தனர். கழக வேட்பாளர் சுகன்யா தாராபுரம் தொகுதி தளவாய்ப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் வாக்களித்தார்.

தாராபுரம் தொகுதி கொழிஞ்சிவாடி வாக்குச் சாவடியில் முதிய பெண் மணி ஜெய்தீன் பீபீ வாக்களிக்க வந்தபோது மை வைக்கும் தேர்தல் அதிகாரி த.வெ.க. சின்னமான விசில் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டதாக அப்பெண் மணி குற்றம் சாட்டியுள்ளார்.

கழக வேட்பாளர் இ.பரந்தாமன் ஆய்வு!

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு வாக்குச்சாவடி மையங்களை கழக வேட்பாளர் இ. பரந்தாமன் ஆய்வு மேற்கொண்டார். வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரியாக உள்ளதா? வாக்குப்பதிவு முறையாக நடைபெறுகிறதா? என்பது குறித்து அங்கு வந்த வாக்காளர்கள் மற்றும் அதிகாரிகளிடம் பரந்தாமன் கேட்டறிந்தார்.

தட்டாஞ்சாவடி தொகுதி!

இதேபோல், புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி தொகுதியிலும் நேற்று விறுவிறுப்பான வாக்குப் பதிவு நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை 9ஆம் தேதி நடைபெற உள்ளது.

ஓட்டுப்பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கை!

நேற்று பதிவான வாக்குகள் வருகிற 9ம் தேதி (வெள்ளிக்கிழமை) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இடைத்தேர்தலையொட்டி 2 தொகுதிகள் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

மதுராந்தகம் - தாராபுரம் இடைத் தேர்தலில் விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்குப்பதிவில் மதுராந்தகம் தொகுதியில் 85.88 சதவிகிதம், தாராபுரம் தொகுதியில் 80.31 சதவிகிதம் பதிவாகியுள்ளது.

அதேபோன்று புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் 80.81 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.